# இராமேஸ்வர தீர்த்தங்கள்

வே.பரந்தாமன் மற்றும்அ.பிரேம்குமார்
ரீச் பவுண்டேஷன், சென்னை



மனித வாழ்வில் வழிபாடு என்பது ஒரு பகுதியாகவும், அவற்றில் தீர்த்தங்கள் மிகமுக்கிய இட்த்தைப் பிடித்துள்ளது.இந்தியாவில் ஒவ்வொரு கோயிலிலும் ஒரு தீர்த்தமாவது உண்டு. தீர்த்தங்கள் ஆறு, பொய்கை, ஊற்று, தெப்பக்குளம், கிணறு, ஆகியவனவாக உள்ளன. கங்கை, யமுனா, சரஸ்வதி, பிரம்மபுத்ரா, காவிரி, வைகை போன்ற ஆற்று நீர்கள் தீர்த்தங்களாக உள்ளன.இராமேஸ்வரத்தில் 64 தீர்த்தங்கள் உள்ளன. இவற்றைப்பற்றி சேதுபுராணம், தேவையுலா, அக்னி புராணம், வால்மிகி ராமாயணம், ஆனந்த ராமாயணம், பாகவதபுராணம், சிவபுராணம், கந்தபுராணம், மனுஸ்மிருதி, கெளதமஸ்மிருதி, தேவலஸ்மிருதி, மற்றும் பல புராணங்கள் குறிப்பிடுகின்றன.

கந்தபுராணத்தில் இறைவன், இறைவிகளின் புணித தீர்த்தங்கள் கந்தமாதன பருவத்தில் உள்ளன என்று கூறுகின்றது. ஆனந்த இராமாயணத்தில் இராமேஸ்வரத்திற்கு வருபவர்கள் பைரவதீர்த்தம், லக்ஷ்மணகுண்டம், அக்னி தீர்த்தம், ஜடாதீர்த்தம், மற்றும் கோடித்தீர்த்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

### மகாலெட்சுமி தீர்த்தம்

இராமநாத சுவாமி கோயிலின் கிழக்கு வாயிலின் அருகில் உள்ள தீர்த்தமாகும்.

### காயத்ரி தீர்த்தம், சாவித்ரி தீர்த்தம்,சரஸ்வதி தீர்த்தம்

மூன்றாம் பிரகாரத்தில் கிழக்கு கோபுரத்தின் வடக்கு பகுதியில் உள்ளன.இங்கு நீராடி காசியப்பர் சாபம் நீங்கினார் என்பது புராண வரலாறு.

### மாதவ தீர்த்தம்

மூன்றாம் பிரகாரத்தின் மேற்கே சேதுமாதவர் கோயிலுக்கு தென்புறத்தில் அமைந்துள்ளது. இதில் நீராடுபவர்களுக்கு திருமகள் அருளும் ,சித்தசுத்தியும் பெறுவர் என்பர்.

### நல தீர்த்தம், நீல தீர்த்தம், கவய தீர்த்தம், கவாட்ச தீர்த்தம், கந்தமாதன தீர்த்தம்

மூன்றாம் பிரகாரத்தின் மேற்கே சேதுமாதவர் கோயிலைச் சுற்றியிருக்கின்றன. இதில் நீராடுபவர்கள் யாக பலன்களையும், வறுமை நீங்கிச் செல்வத்தையும்,வீ டுபேற்றையும் பெறுவார்கள் என்று புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

### சங்கு தீர்த்தம்

இரண்டாம் பிரகாரத்தில் வடக்கு கருவூலத்திற்கருகில் உள்ளது. இதில் நீராடி வத்ச நாப முனிவர் செய்நன்றி மறந்த பாவத்தை நீக்கிக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

### சக்ர தீர்த்தம்(முனி தீர்த்தம்)

இரண்டாம் பிரகாரத்தின் கிழக்கே அமைந்துள்ளது.இங்கு சூரியன் மூழ்கிப் பொற்கை பெற்றதாகக் கூறப்படுகிறது.

### பிரம்மஹத்தி விமோசன தீர்த்தம், சூர்யதீர்த்தம், சந்திர தீர்த்தம்

இவை இரண்டாம் பிரகாரத்தின் வடக்கு உட்பிரகாரத்தில் இருக்கின்றது. இத்தீர்த்தத்தை பற்றி பத்மபுராணத்தில் பிரமணரை கொல்வதன் பொருட்டு ஏற்படும் தோசத்தை போக்குவதற்க்கு நீராடினால் தோசம் விளகும். இதில் நீராடினால் பிரம்மஹத்திப் பாவம் நீக்கமும், முக்கால ஞானப்பேறும் கிடைக்கும் என்பர்.

### கங்கா தீர்த்தம்,யமுனாதீர்த்தம்,கயா தீர்த்தம்

இவைகளும் இரண்டாம் பிரகாரத்தின் வடக்கு உட்பிரகாரத்தில் இருக்கின்றது. இத்தீர்த்த்த்தினை சிவனே உறுவாக்கியதாகும். இங்கு நீராடி ஞானசுருதி மன்னன் ஞானம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

### சிவ தீர்த்தம்(சிவகங்கை தீர்த்தம்)

சுவாமி அம்மன் சந்நிதிகளுக்கு இடையே பெரிய நந்திக்குத் தெற்கே அமைந்துள்ளது.இதில் நீராடி பைரவர் பிரம்மஹத்திப் பாவத்தை நீக்கிக்கொண்டார் எனப்படுகிறது.

### சாத்யாமிர்த தீர்த்தம்

முதல் பிரகாரத்தில் அம்பாள் சந்நிதியில் சுக்கிரவார மண்டபத்திற்குத் தெற்கேயுள்ளது. இத்தீர்த்தத்தில் நீராடிய புருவ சக்கரவர்த்தி தும்புருவின் சாபத்தை நீக்கிக்கொண்டார் என்பது புராண வரலாறு.

### சர்வதீர்த்தம்

முதல் பிரகாரத்தில் இராமநாதர் சந்நிதியின் தென்கிழக்கில் உள்ளது. சுதர்சனர் என்பவர் பிறவிக் குருடும்,நரை மூப்பு இவைகளையும் இங்கு நீராடி நீங்கப்பெற்றார் என்று சொல்லப்படுகின்றது.

பிருகுமுனிக்கு ஒரு கண் குருடான மகன் பிறந்தான். அவனுக்கு கண் பார்வை வரவேண்டுமென்று இராமநாதசுவாமியை வழிபட்டு அனைத்து தீர்த்தங்களிலும் நீராட வேண்டுமென்றான். எனவே இறைவன் சர்வ தீர்த்தமொன்றை ஏற்படுத்தி நீராடச் செய்தார். இத்தீர்த்தத்தை மானச தீர்த்தம் என்றும் அழைப்பர். இத்தீர்த்தத்தில் குளித்தால் அனைத்து தீர்த்தத்திலும் குளித்ததிற்குச் சமமாகும். இத்தீர்த்தத்தை சேதுபுராணத்தில் கூறப்படுகின்றது.

கோடி தீர்த்தம்

முதல் பிரகாரத்தில் வடக்கில் விசாலாட்சியம்மை சந்நிதிக்கருகில் உள்ளது. இதில் யாரும் நேரே தண்ணீர் எடுத்து முழுக முடியாது.அதற்காக வேலையிலுள்ள பிராமணர் எடுத்து ஊற்றிய பின் பெற்றுக்கொள்ள வேண்டும். இதில் முழ்கியபின் எவரும் இராமேசுவரத்தில் தங்கக்கூடாது என்பது ஐதிகம்.அதனால் தான் கோடி(கடைசி) தீர்த்தம் என்று பெயர் பெற்றதுபோலும். கிருஷ்ணபகவான் இந்த தீர்த்தத்தில் நீராடிக் கம்சனைக் கொன்ற பாவத்தை நிவர்த்தி செய்து கொண்டார் என்று புராணம் கூறுகிறது. இந்நீரில் முழ்கியவர் இஷ்டசித்தியும்,ஞானமுத்தியும் பெறுவர் என்றும் சொல்லப்படுகிறது.

**அக்னீ புராணம், அத்யாத்மிக ராமாயணத்தில் இடம் பெற்ற பிற தீர்த்தங்கள்**

பாண தீர்த்தம் - மேற்கு கோபுரம் அருகில் அமைந்துள்ளது.

பாசுபத தீர்த்தம் - மேற்கு கோபுரம் அருகில் அமைந்துள்ளது.

ராவணேஸ்வர தீர்த்தம் - மேற்கு கோபுரம் அருகில் அமைந்துள்ளது.

நந்தி தீர்த்தம் - மேற்கு கோபுரம் அருகில் அமைந்துள்ளது.

பிருங்கி தீர்த்தம் - மேற்கு கோபுரம் அருகில் அமைந்துள்ளது.

கால சம்ஹர தீர்த்தம் - தென் மேற்கு பகுதியில் உள்ளது.

குமார தீர்த்தம் - வடக்கு கோபுரம் அருகில் உள்ளது.

ரிசி தீர்த்தம் - வட கிழக்கு பகுதியில் உள்ளது.

இந்திர தீர்த்தம் - கிழக்கு கோபுரம் அருகில் உள்ளது.

யம தீர்த்தம் - தெற்கு கோபுரம் அருகில் உள்ளது.

குபேர தீர்த்தம் - வடக்கு கோபுரம் அருகில் உள்ளது.

ஸ்ரீகண்ட தீர்த்தம் - வடக்கு கோபுரம் அருகில் உள்ளது.

பலராம தீர்த்தம் - வடக்கு கோபுரம் அருகில் உள்ளது.

பரத தீர்த்தம் - வடக்கு கோபுரம் அருகில் உள்ளது.

**இராமேஸ்வரம் கிராமத்தில் உள்ள தீர்த்தங்கள்(நீர் நிலைகள்) பற்றிய விபரம்.**

கஜ தீர்த்தம் - ஓலைக்குடா அய்யனார் கோயில் அருகில் உள்ளது.

நாரண தீர்த்தம் - ஓலைக்குடா கிராம பகுதியில் அமைந்துள்ளது.

நாரணீய தீர்த்தம் - ஓலைக்குடா கிராம பகுதியில் அமைந்துள்ளது.

அரிய நச்சி தீர்த்தம் - ஓலைக்குடா கிராம வழியில் அமைந்துள்ளது.

வீர தீர்த்தம் - சம்பை கிராமத்தில் அமைந்துள்ளது.

விரேக தீர்த்தம் - சம்பை கிராமத்தில் அமைந்துள்ளது.

கிருஷ்ண தீர்த்தம் - சம்பை கிராமத்தில் அமைந்துள்ளது.

ஹர தீர்த்தம் - மாங்காடு கிராமத்தில் அமைந்துள்ளது.

பனகன் தீர்த்தம் - மாங்காடு கிராமத்தில் அமைந்துள்ளது.

குமுத தீர்த்தம் - ஈஸ்வரி அம்மன் கோயில் அருகில் உள்ளது.

பிரம்ம குண்ட தீர்த்தம் - சிறு தரவை அருகில் மகர் நோம்பு திடல் பகுதியில் உள்ளது.

பரசு ராம தீர்த்தம் - பத்திரகாளி கோயில் எதிரில் உள்ளது.

திரௌபதி தீர்த்தம் - பத்திரகாளி கோயில் அருகில் உள்ளது.

லட்சுமண தீர்த்தம் - மதுரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் இடது புறம் லெட்சுமணேஸ்வரர் கோயில் அருகில் உள்ளது. லெட்சுமணர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து திருமஞ்சனம் செய்விப்பதற்காக ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது. பலராமருக்கு பிரமஹத்தி நீங்கினதாகவும் சொல்லப்படுகிறது.



லட்சுமண தீர்த்தம்

ராம தீர்த்தம் - மதுரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் இடது புறம் ராமர் கோயில் அருகில் உள்ளது. குளத்தின் மேற்கரையில் பழமையான இராமர் கோயில் இருக்கிறது.

சுக்ரீவ தீர்த்தம் - கந்தமாதன பர்வதம் செல்லும் வழியில் சுக்ரீவர் கோயில் அருகில் உள்ளது.

அங்கத தீர்த்தம் - கந்தமாதன பர்வதம் செல்லும் வழியில் அமைந்துள்ளது.

ஜாம்பவ தீர்த்தம் - கந்தமாதன பர்வதம் செல்லும் வழியில் அமைந்துள்ளது.

வாலி தீர்த்தம் - ஜாம்பவ தீர்த்த்தின் வடக்கே அமைந்துள்ளது.

கந்தமாதன தீர்த்தம் - கந்தமாதன பர்வதம் அருகில் அமைந்துள்ளது.

தர்ம தீர்த்தம் - கந்தமாதன பர்வதம் அருகில் அமைந்துள்ளது.

பீம தீர்த்தம் - கந்தமாதன பர்வதம் அருகில் அமைந்துள்ளது.

அர்ஜுன தீர்த்தம் - கந்தமாதன பர்வதம் அருகில் அமைந்துள்ளது.

நகுல தீர்த்தம் - கந்தமாதன பர்வதம் அருகில் அமைந்துள்ளது.

சகாதேவ தீர்த்தம்- மகர் நோம்பு திடல் அருகில் அமைந்துள்ளது.

அனுமகுண்ட தீர்த்தம் - பத்திரகாளி கோயில் அருகில் பின் புறம் அமைந்துள்ளது.

அகஸ்திய தீர்த்தம் - அக்னீ தீர்த்ததின் வடக்கே அமைந்துள்ளது.

அக்னீ தீர்த்தம் - ராமநாத சுவாமியின் எதிரில் கிழக்கு கடற்கரை பகுதியில் அமைந்துள்ளது. துஷ்புண்ணியன் என்பாவன் பேயினால் அடைந்த துன்பத்தை இதில் நீராடி நீக்கிக்கொண்டான் என்று கூறப்படுகிறது.

நாக தீர்த்தம் - இராமேஸ்வரம் கீழவீதியில் தேவஸ்தான கட்டிட்த்தின் பின்புறமுள்ள தோட்டத்திலிருக்கிறது. கங்கை முதலிய எல்லா தீர்த்தங்களும் தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ள இங்கே வசிப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஜடா மகுட தீர்த்தம் - தனுஷ்கோடி செல்லும் சாலையின் இடது புறம் சிவன் கோயில் அருகில் அமைந்துள்ளது. இராமலட்சுமணர்கள் இங்கு சடைமுடியைக் கழுவியதாகக் கூறுவர்.

ஜடாயு தீர்த்தம் - தனுஷ்கோடி செல்லும் சாலையின் இடது புறம் ஜடா மகுட தீர்த்த்தின் அருகில் அமைந்துள்ளது.

சர்வ ரோக நிவாரண தீர்த்தம் - தனுஷ்கோடி செல்லும் சாலையின் இடது புறம் ஜடா மகுட தீர்த்தம் அருகில் அமைந்துள்ளது.

தேவ தீர்த்தம் - தனுஷ்கோடி செல்லும் சாலையின் வலது புறம் நம்பு நாயகி அம்மன் கோயில் அருகில் அமைந்துள்ளது.

விபீஷண தீர்த்தம் - தனுஷ்கோடி செல்லும் சாலையின் இடது புறம் கோதண்டராமர் கோயில் அருகில் அமைந்துள்ளது.

சரப தீர்த்தம் - தனுஷ்கோடி செல்லும் சாலையின் இடது புறம் இரட்டைதலை முனீஸ்வரர் கோயில் அருகில் அமைந்துள்ளது.

ஞானவாபி தீர்த்தம் - ஏறகாடு அய்யனார் கோயில் எதிரில் அமைந்துள்ளது.

சேது தீர்த்தம் - தனுஷ்கோடி சேது மாதவர் கோயில் அருகில் ரத்னாகரம்கோத்தி சங்கமம் வங்காள விரிகுடா, இந்துமகா சமுத்திர சங்கமம் ஆகும்.

**பாம்பன் கிராமத்தில் உள்ள தீர்த்தங்கள்(நீர் நிலைகள்) பற்றிய விபரம்.**

பரமேஸ்வர தீர்த்தம், ருண விமோசன தீர்த்தம் - இது ஏகாந்த ராமர் கோயிலுக்கு அருகில் சாலையின் வடக்கே அமைந்துள்ளது.



சேது தீர்த்தம்

சிம்ம தீர்த்தம் - சிங்காத்தா குளம் அருகில் அமைந்துள்ளது.

மங்கள தீர்த்தம் - தங்கச்சிமடம் சாலைக்குத் தென்புறமாக அமைந்துள்ளது.

அமிர்தவாபி தீர்த்தம் (ஏகாந்த ராமர் கோயில்) - இது தங்கச்சிமடம் அருகிலுள்ள ஏகாந்த ராமர் கோயிலுக்குள் அமைந்துள்ளது.இத்தீர்த்தம் சுவையாகவும், உடல் ஆரோக்கியத்தையும், செல்வ வளங்களையும் கொடுக்கக்கூடியதாகும்.

தேவரீர் (முனி) தீர்த்தம் - கெண்டக்கால் கோயில்

கபி தீர்த்தம் - பாம்பனின் வடக்கு பகுதியில் முருகன் கோயில் அருகில் அமைந்துள்ளது.இதில் நீராடி அம்பை சாபவிமோசனம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.


பைரவ தீர்த்தம் - பாம்பன் இருப்புப்பாதை நிலையத்தின் அருகில் உள்ளது.

வில்லூரணி தீர்த்தம் - ருண விமோசனத் தீர்த்தத்துக்கு வடக்கு கடற்கரை அருகில் அமைந்துள்ளது.சீதையின் நீர் வேட்கையைத் தீர்ப்பதற்காக இராமபிரான் வில்லூன்றி ஏற்படுத்தியது ஆகும். கடற்கரையில் இருந்தாலும் மிகவும் நல்ல தண்ணீர்.

சீதா(குண்டம்) தீர்த்தம் - தங்கச்சிமடம் இருப்புப்பாதை நிலையத்திற்கு வடக்கிலும் கபி தீர்த்தத்திற்குக் கிழக்கிலும் உள்ளது. இங்கு இந்திரன் பிரம்மஹத்தியை நீக்கிக்கொண்டான்.

சரவண தீர்த்தம் - பாம்பன் குந்துகால் பகுதியில் முனீஸ்வரர் கோயில் எதிரில் இருக்கிறது.

## Visit to Pandian Fort in Saathakone Village






A visit to Vedhalai village and Focus Group discussion with the villagers made us to explore the ancient pandian fort. It was exciting to see the ancestral remains in the village. Villagers were excited to take us around the fort. There were remains of a temple and on enquiry from the village elders, we could discover the existence of a Rama Temple near the fort. It is learnt after winning a war, Kings used to build a fort as a mark of resemblance of their victory "Vetri mandapam" with a stone inscription. This seems to be one such fort.



***Outer portion of the Fort***



***Inner Portion …***





*Inner Pillar in a dilapidated condition*

*Another view of the Fort*





*Outer Back portion*

*Believed to be a Rama Temple*

Explorations are on to trace the footprints of the history of this fort.